23.03.2026

O.S.NO. 376/2022

D.W. 1. திரு.குழந்தை சாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

பி.வா.சா.ஆ.14 ஆவண எண். 990/1917 பிராது தபசில் சொத்தில் வராது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.15 ஆவண எண். 2713/1926 பிராது தபசில் சொத்தில் வராது என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. பி.வா.சா.ஆ.16, ஆவண எண். 361/1943 பிராது தபசில் சொத்தில் வராது என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. பி.வா.சா.ஆ.17, ஆவண எண்.2207/1952 பிராது தபசில் சொத்தில் வராது என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. பி.வா.சா.ஆ.18, ஆவண எண்.5246/1966 பிராது தபசில் சொத்தில் வராது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.19, ஆவண எண்.5283/1966 பிராது தபசில் சொத்தில் வராது என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணங்களை தெரியாது என்று நான் சொல்வது வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. இராஜகோபாலபுரம் கிராமம் சர்வே எண். 96A ல் மொத்தம் 4 ஏக்கர் 67 செண்ட் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 96B ல் மொத்தம் 2 செண்ட் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.100 ல் மொத்தம் 3 ஏக்கர் 81 செண்ட் உள்ளது என்றால் சரிதான். அதே போல் சர்வே எண். 101 ல் 3 ஏக்கர் 70 செண்ட் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 102 ல் 4 ஏக்கர் 10 செண்ட் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 103 ல் 4 ஏக்கர் 80 செண்ட் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்களை சேர்த்து மொத்தம் 21 ஏக்கர் 6 செண்ட்

உள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா 1942ல் ஆவண எண். 3765/1942 மூலம் 70 செண்ட் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அதே போல் ஆவண எண். 3691/1942 மூலம் 52 செண்ட் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அதேபோல் ஆவண எண். 4152/1942 மூலம் 30 செண்ட் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். ஆக மொத்தம் 1942ல் 1 ஏக்கர் 57 செண்ட் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 1 ஏக்கர் 57 செண்ட்டில் 39.25 செண்ட் நிலத்தினை இராஜகோபாலபுரத்தை சேர்ந்த வேலு, சுப்பையா ஆகியோருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். கிரையம் கொடுத்தது போக எனது தாத்தாவிற்கு 1 ஏக்கர் 17 செண்ட் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு எனது பெரியப்பா சுடலைமுத்துவும், எனது அப்பாவும் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி பெரியப்பா சுடலைமுத்துவிற்கு 58 செண்ட்டும், எனதுஅப்பாவிற்கு 58 செண்ட் நிலமும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சர்வே நம்பர்களை பொறுத்து என அப்பா தனிப்பட்ட முறையில் ஆவண எண். 1022/1957ல் 87.75 செண்ட் நிலத்தினை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு தாத்தா வழி வந்த 58 செண்ட்டும், எனது அப்பா கிரையம் பெற்ற 87.75 செண்ட நிலத்தையையும் சேர்த்து 1 ஏக்கர் 46 செண்ட் பழனி வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,

Tirunelveli.